**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.51/2024 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு.வெங்கடேசன் |
| Husband/Father Name | ராஜேந்திரன் |
| Village /Area | சோகனூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 43 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.10.2025.
**(எதிரிகள் ஆஜர். ).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்தவர் என் அண்ணன் மகன் ஆவார். அசா.2 என்னுடைய அண்ணி ஆவார். கடந்த 2020 ம் ஆண்டு தேதி, மாதம் நினைவு இல்லை, என் அண்ணன் மகன் தீனா அவருடைய நண்பர்களுடன் சென்றுவிட்டால் இரண்டு முதல் நான்கு நாட்கள் கழித்து தான் வீட்டிற்கு வருவார். செய்தித்தாளில் கையில் பச்சை குத்தியும் கழுத்தில் ஐப மாலையுடன் ஒரு தகவல் வெளியாகி இருந்தது. அதனை பார்த்து நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று தகவல் அளித்தோம். பிறகு போலீசார் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் இருந்த பிரேதத்தினை நாங்கள் போலீசாரிடம் இறந்தவர் தான் என் அண்ணன் மகன் தீனா என்று நானும் என் அண்ணியும் அடையாளம் காட்டினோம். இறந்தவரின் உடலில் கழுத்து, கை மற்றும் கால்களில் வெட்டு காயங்கள் இருந்தன. பிறகு

போலீசாரிடம் இறந்தவர் என்னுடைய மகன் தீனா தான் என்று அடையாளம் காட்டினோம். போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். பிறகு உடலை பெற்றுக்கொண்டு எங்கள் குல வழக்கம் படி அடக்கம் செய்தோம், இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.07 16:56:40 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.